# அம்மா சுட்ட தோசை

அம்மா சாப்பிட சொன்னார்,

ஆப்பம் சுட்டு தந்தார்,

இரண்டு தின்ன சொன்னார்,

ஈக்கள் மொய்க்கும் என்பதால்,

உடனே உண்ண சொன்னார்,

ஊதி ஊதி நானும்,

எட்டு துண்டு தின்றேன்,

ஏப்பம் விட்ட பின்பும்,

ஐந்து துண்டு தின்றேன்,

ஒன்றும் மிச்சம் இல்லை,

ஓய்வெடு என்றாள், “ஓய்ந்திருக்கலாகாது”-

ஔவை மொழி என்றேன்,

அஃது பாரதி பாட்டு என்றாள்.

# அச்சமில்லை! அச்சமில்லை!

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சம் என்பது இல்லையே.

இச்சகத்தில் உள்ளோர் எல்லாம் எதிர்த்து நின்ற போதினும்,

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சம் என்பது இல்லையே.

துச்சமாக எண்ணி நம்மை ஊறு செய்த போதினும்,

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சம் என்பது இல்லையே.

பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதினும்,

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சம் என்பது இல்லையே.

இச்சை கொண்ட பொருள் எல்லாம் இழந்து விட்ட போதினும்,

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சம் என்பது இல்லையே.

— சுப்ரமண்ய பாரதியார்

# ஓடி விளையாடு பாப்பா

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

சின்னஞ்சிறு குருவி போலே – நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வண்ண பறவைகளைக்கண்டு – நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

# ஓடி விளையாடு பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா..

பொய்சொல்லக் கூடாது பாப்பா – என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா – ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா..

சி.சுப்ரமண்ய பாரதியார்

# எறும்பும் நானும்

எறும்பே! எறும்பே! எங்கே போறீங்க!

எந்த வீட்ல இனிப்பு இருக்குன்னு பாக்கப்போறேங்க!

பாத்து நீங்க என்ன செய்வீங்க?

பதமா நானும் சேத்து வைப்பேங்க!

சேத்து வைச்ச இனிப்பெல்லாம் என்ன செஞ்சிங்க?

சேர்ந்தார்க்கெல்லாம் கொடுக்கப்போறேங்க!

நல்ல செய்தி சொன்னீங்க

நானும் தானே சேமிப்பேன்

நல்லவர்க்கெல்லாம் கொடுப்பேன்!

# யானை வருது !



யானை வருது யானை வருது பாரு! பாரு!

யானை கையில் வாழைப்பழம் ஜோரு ஜோரு

வாழைப்பழம் உனக்கு வேண்டுமா கேளு! கேளு!

பழத்தைத் தின்று பயமில்லாமல் வாழு! வாழு

# குட்டிக் குரங்கு!





குட்டிக் கரணம் போடுகிறாய்

குதித்து குதித்து ஆடுகிறாய்

எட்டிப் பிடிக்க முடியவில்லை

ஏனோ இந்த சுட்டித்தனம்

சுட்டித்தனத்தை மறந்துவிடு

சுகமாய் நாமும் விளையாடலாம்.

# வாருங்கள்! வளருங்கள்!

பள்ளி செல்வோம் வாருங்கள்!
நல்ல பழக்கங்களைக் கற்று வளருங்கள்
நூலகம் செல்வோம் வாருங்கள்!
நூல் பல கற்று உயருங்கள்
கோவிலுக்குச் செல்வோம் வாருங்கள்!
நல் குணங்களைப் பெற்று முன்னேறுங்கள்
எங்கெங்கு சென்றாலும் ஏற்றம் உண்டாம்.
எதிலும் நன்மை பெறுவோம்.

# இரயில் வண்டி




குப் குப் இரயில் வண்டி

குதுகலமான இரயில் பயணம்

பெட்டி பெட்டியாய் இருக்கும்

பொருளைக் கொண்டு செல்ல உதவும்

நான் போகும் இரயில் வண்டி

நல்ல தமிழில் தொடர்வண்டி